முதல்வரின் பொங்கல் பரிசு 3000 ரூபாயால் தமிழ்நாடு மக்கள் பொங்கலை உவகையுடன் கொண்டாடினர்!

# 2026-இல் மக்கள் தீர்ப்பு - ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!

## சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் உத்திரமேரூர் க.சுந்தர் பேச்சு!

**சென்னை, ஜன.24- சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் உத்திர மேரூர் தொகுதி உறுப்பினர் க.சுந்தர் பேசுகையில் 2026-ல் மக்கள் "ஸ்டாலின் தொடரட்டும் - தமிழ் நாடு வெல்லட்டும்" என்ற தீர்ப்பாகத்தான் இருக்கும் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் உத்திரமேரூர் க.சுந்தர் பேசியதாவது:-

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தமிழ்நாட்டு சட்டமன்றப் பேரவையில் எனக்கு பேசுகின்ற வாய்ப்பளித்த நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சர், கடந்த நிதியாண்டில் 11.19 சதவிகிதம் என்ற உயரிய பொருளாதார வளர்ச்சியை தன்னுடைய அயராத உழைப்பால் சாத்தியப்படுத்திய இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டை இந்தியாவினுடைய விளையாட்டு தலைநகரமாக மாற்றுகின்ற முயற்சியிலே, தன்னுடைய சீரிய உழைப்பை பயன்படுத்திக் கொண்டு வருகின்ற நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆளுநர் வெளியேறியதால் சாதனைகளை மறைக்க முடியாது!**

இந்த ஆளுநர் உரை என்பது, ஓர் அர்த்தமற்ற நடைமுறை என்றுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் உரை தேவையில்லை என அரசியலமைப்பில் திருத்தம் கோருவோம். அரசு தயாரித்து அளித்த அறிக்கையை ஆளுநர் படிக்காமல் வெளியேறுவதால், திராவிட மாடல் அரசினுடைய சாதனைகளை மறைக்க முடியாது என்பதையும் தெரிவித்ததோடு, 'ஆட்டுக்கு தாடி தேவையில்லை; நாட்டுக்கு கவர்னர் தேவையில்லை' என்று நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள், ஆளுநர் பதவியே தேவையில்லை என்று குறிப்பிட்டதையும் சொன்னார்கள்.

அப்படியே தேவையென்று நினைத்தால், குடியரசு தலைவரை வாக்களித்து தேர்வு செய்வதைப் போல, ஆளுநரையும் வாக்களித்து தேர்வு செய்து, அது ஓரளவு சட்டப் பிரச்சினைகளை தீர்க்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே ஒவ்வொரு முறையும், கடந்த 3 முறையும் ஆளுநர் உரையை நிறைவு செய்கின்றபோது, வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணி திருநாடு என்று இப்படிதான் முடிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த வரிகள் நம்முடைய ஆளுநருக்கு பிடிக்கவில்லை. அதில் முதல் இரண்டு வரிகள் அவருக்கு பிடிக்காமல் போகலாம். ஆனால், வாழிய பாரத மணித் திருநாடு என்பதையும் அவர் தாண்டி செல்கிறார் என்று சொன்னால், பிடிக்காமல் போகலாம்; ஆனால் படிக்காமல் போகலாமா என்பதுதான் இந்த சட்டமன்றத்தினுடைய கேள்வி என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல,

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்களுக்கு இறையென்று வைக்கப்படும்**

என்ற அய்யன் திருவள்ளுவரின் காலத்தால் அழியாத அந்தக் குறளை நான் இங்கே நினைவுப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 100 நாள் வேலையைப் பற்றி சொன்னார்கள். ஒன்றும் சிரமமே படவேண்டியதில்லை. நாளைக்கு நம்முடைய பாரத பிரதமர் அவர்கள் மதுராந்தகம் வருகிறார்கள். அவர் பக்கத்தில்தான் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அமரப் போகிறார்கள். அப்போது சொல்லலாம், இந்த 100 நாள் வேலை



திட்டத்தில் தமிழ்நாட்டில் நிறைய பிரச்சினை இருக்கிறது.

கடும் நிதிச் சுமையை மாநில அரசுக்கு ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலைதான் The Viksit Bharat-Guarantee for Rozgar and Ajeevika Mission (Gramin) (VB-G RAM G). எனவே, அதனை மாற்றி, தமிழ்நாட்டிற்கு அதிக நிதியை ஒதுக்கி கொடுங்கள் என்று சொல்லி, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பாரத பிரதமரிடம் கோரிக்கை வைக்கலாம் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, 2 கோடியே 23 இலட்சம் குடும்பங்கள் பொங்கல் பரிசோடு, தொகுப்புகளோடு, இந்த கைத்தறி, வேட்டி சேலையையும் பெற்று, மகிழ்ச்சி கடலிலே மிதந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் உவகையுடன் தமிழர் திருநாளை கொண்டாடிட, இந்தப் பொங்கல் பரிசு உதவியாக இருக்கும் என்பதுதான் இந்த அரசினுடைய உரை. அந்த திராவிட மாடல் உரை, அந்த உணர்வுபூர்வமான அந்த உரையை நான் இந்த நேரத்தில் வரவேற்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். ஆக, 2 கோடியே 23 இலட்சம் குடும்பங்கள் பொங்கல் பரிசு பெறுகிறார்கள். அதோடு சேர்ந்து ஒரு மகிழ்ச்சி பொங்கலாக மாறுகிறது. அதில் 1 கோடியே 30 இலட்சம் குடும்பங்கள் கூடுதலாக உரிமை பொங்கல் கொண்டாடுகின்ற வகையில் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள்.

வரலாறு காணாத பொங்கல், இந்தப் பொங்கல். 2026 ஆம் ஆண்டு பொங்கல், இதுவரை நிச்சயமாக வரலாற்றில் பார்த்தது கிடையாது. ஏனென்று சொன்னால், மாநகரங்கள், நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்கள் வரை இந்தப் பணம் பாய்ந்தது; அதனால் பொருளாதார உயர்வு ஏற்பட்டது. பணப்புழக்கம் ஏற்பட்டது. அதனால்தான் தமிழ்நாட்டினுடைய தனிநபர் வருமானத்தில் இந்தியாவை காட்டிலும், மிக முன்னிலையில் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, இந்தத் திராவிட பொங்கல் அதனை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். ரூ.3,000 கொடுத்தால் பெரிய விஷயமா என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், இது மிக, மிக பெரிய விஷயம்.

**அ.தி.மு.க. வாக்குறுதிகள் நிறைவேற்றவில்லை!**

அதுமட்டுமல்ல, நம்முடைய முன்னாள் அமைச்சர் தங்கமணி அவர்கள் சொன்னார் இந்த வாக்குறுதிகளை எல்லாம் நீங்கள் நிறைவேற்றினீர்களா என்று? நிச்சயமாக திராவிட மாடல் அரசு பெருமளவு வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறது. அதை யாரும் மறுக்கமுடியாது. நீங்கள் 2011-ல் கொடுத்த வாக்குறுதிகள்.

சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடலோர சாலை திட்டம், தென்தமிழகத்தில் Aeropark, ஆன்லைன் வர்த்தகம் தடுக்கப்படும், 10 ஆடை அலங்காரப் பூங்காக்கள், திருப்பூர் சாயக் கழிவுகளை சுத்திகரிக்க விஞ்ஞான கழிவு அகற்றும் நிலையம், 58 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இலவச bus pass, மின்னணு ஆளுமையின்கீழ் அனைத்து காவல் நிலையங்கள், விவசாயிகளை பங்குதாரர்களாக கொண்ட ஆறு அங்காடி சிறப்பு பொருளாதார மண்டலங்கள், பள்ளிகளில் தாய்மொழியோடு பிற மொழிகள் பயில சிறப்பு பயிற்சிகள், நீதிமன்றங்களில் தமிழ்மொழி, தமிழ்வழியில் படித்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை, வனவிலங்குகள் குடியிருப்பு விவசாய நிலங்களுக்குள் புகுவதை தடுக்க நடவடிக்கை, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை இரண்டு மடங்காக்குவோம், மொபைல் மின்னணு ஆளுமை திட்டம் இவையெல்லாம் 2011-ஆம் ஆண்டு நீங்கள் சொன்ன வாக்குறுதிகள்.

அதனைத் தொடர்ந்து 2016--ல் நீங்கள் சொன்ன வாக்குறுதிகள். அனைத்து ரேசன் அட்டைதாரர்களுக்கும் செல்போன் விலையின்றி வழங்கப்படும், பெரிய பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களில் இலவச Wi-Fi இணையதள வசதி வழங்கப்படும், அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அம்மா இருசக்கர வாகன பழுதுபார்க்கும் பயிற்சி மையம் உருவாக்கப்படும், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு அம்மா ஸ்கூட்டர் வழங்கப்படும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு நீராவி கொதிகலன்களும், நீராவி இட்லி குக்கர்களும் வழங்கப்படும், அம்பேத்கர் கொள்கையை பரப்ப ரூ.5 கோடியில் Dr. Ambedkar Foundation நிறுவப்படும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், ஆறு அரசு தலைமை மருத்துவமனைகளிலும் கட்டணமில்லா கருத்தரிப்பு மையங்கள் ரூ.10 கோடியில் உருவாக்கப்படும். இவை எதையுமே நீங்கள் செய்யவில்லை என்பதுதான் நான் இந்த நேரத்திலே இங்கே வைக்கின்ற குற்றச்சாட்டு.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாவட்டத்திற்கு சொன்ன வாக்குறுதிகள், அவர்களுடைய தொகுதிக்கு சொன்ன வாக்குறுதிகள் அவற்றையெல்லாம் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. ஆக, இப்படி நீங்கள் சொன்னதை செய்யவில்லை. ஆனால் இன்றைக்கு இந்த அரசு 23 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் கொண்டுவந்ததுதான் புதிய ஓய்வூதியத் திட்டம். புதிய ஓய்வூதியத் திட்டத்தை நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள். ஒன்றிய அரசு 2003-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது என்று சொன்னால், அதை அவர்கள் 2004-ஆம் ஆண்டு தான் அமல்படுத்தினார்கள். ஆனால் நீங்கள் 2003-ஆம் ஆண்டே அமல்படுத்தி, வேக வேகமாக அமல்படுத்தியதன் விளைவுதான் இன்றைக்கு அரசு ஊழியர்கள் தொடர்ந்த அந்தப் போராட்டம். ஆக நீங்களும் 15 ஆண்டு காலம் ஆட்சியில் இருந்திருக்கிறீர்கள்.

ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற நான்கரை ஆண்டு காலத்தில், அரசு ஊழியர்களின் பிரச்சினையை கருணையோடு அணுகி, இன்றைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் நிச்சயமாக அது பலனளிக்கக்கூடிய திட்டம். அதில், இன்னும் சில சில குறைகள் இருக்கலாம். அதைத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதையும் சரிசெய்வதற்கு நாட்கள் இருக்கின்றது. அதையும் சரிசெய்துவிடுவார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி**

நிறைய திட்டங்கள், எண்ணற்ற சாதனைகள். பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம், பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் (மணியடிக்கப் பெற்றது) 10 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு laptop இப்படி எல்லாம் செய்திருக்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. அதைப் போலவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்கிற ஒரு அட்சயப் பாத்திரத்தை 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கியிருக்கின்றார்கள். அதிலே மிகச் சிறப்பான முறையிலே நீண்டகால பிரச்சினைகள், தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் தீர்க்க ப்பட்டி ருக்கிறது. ஒவ்வொருவருக்கும் அது தெரியும். யார் யார் வெளியில் சொன்னர்கள் என்று தெரியவில்லை.

எனக்கிருக்கிற பிரச்சினை, எங்களுடைய உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், இரண்டாக பிரிக்கப்பட்டு சாலவாக்கம் ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்பட வேண்டுமென்று, 40 ஆண்டுகாலம் நானே இந்த கோரிக்கையை முன்வைத்தேன். அதை உருவாக்கித் தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், துறையின் அமைச்சர் அவர்களுக்கும், அரசாங்கத்தின் உயர் அலுவலர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எண்ணற்ற சாதனைகள். ஆனால் என்னுடைய நேரத்தை நீங்கள் குறைக்கின்ற காரணத்தால் நான் நிறைவுப் பகுதிக்கு வந்துவிடுகிறேன்.

இந்த அவை பல்வேறு சாதனைகளை செய்த அவை. பல்வேறு தலைவர்கள் நிறைந்த அவை. இதில் ஐந்தாண்டு காலம் நாம் பசுமை நிறைந்த நினைவுகளோடு பழகியிருக்கிறோம். நவரச உணர்வுகள். சிறிது நேரத்திற்கு முன்னர்கூட எதிர்க்கட்சியினர் ஆவேசத்தைக் காட்டினார்கள். பல விதமான நவரச உணர்வுகளையும் வெளிப்படுத்திய இந்த அவையிலே நாம் எல்லோரும் பழகியிருக்கிறோம். இங்கிருக்கும் அனைவருக்கும் மீண்டும் நாம் இந்த அவையிலே வர வேண்டுமென்ற எண்ணம் இருக்கும். அது தவறில்லை என்றாலும், நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 2026-ல் மக்கள் அளிக்கக்கூடிய தீர்ப்பு "ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்" என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த அவைக்கு உணர்த்தி மகிழ்ச்சியோடு தெரிவித்து, அரசினுடைய உரையை வரவேற்று அமைகிறேன்.

இவ்வாறு க.சுந்தர் உரையாற்றினார்.

# தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர், வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அறிவிப்பு!

தருமபுரி, ஜன.24-

தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:



தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று (24.01.2026 -சனிக்கிழமை) காலை 11.00 மணியளவில், மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் மாவட்ட கழக அவைத்தலைவர் C.செல்வராஜ் தலைமை யில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, ஆகியவற்றின் மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2, BLC, BDA உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:1) ஜனவரி 20 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து. 2) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு (SIR)குறித்து. 3) கழக ஆக்கபணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், ஜன. 24-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை நடைபெற உள்ளதாக மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம், நாளை (25.01.2026 -



(ஞாயிற்றுக்கிழமை) மாலை 4:30 மணியளவில் கட்சி அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டத்தின் பொருள் : 26.01.2026 அன்று தஞ்சைக்கு தலைவர் முதல்வர் வருகை, 28.01.2026 கும்பகோணத்திற்கு முதல்வர் வருகை. 2026 சட்டமன்றத் தேர்தல்,

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



கரூர் மாவட்டத்தில் 'திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்' நிகழ்வின் பகுதியாக, கரூர் மாவட்ட கழகத்தின் சார்பில், கரூர் மாநகராட்சியின் 6 பகுதிகள், 20 ஒன்றியங்கள், 3 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் என மொத்தம் 37 இடங்களில், மொத்த பரிசுத்தொகை ரூ. 27,04,000/ மதிப்பில், தமிழர் திருவிழாவான பொங்கல் சிறப்பு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. அதில் வெற்றி பெற்ற ஆண்கள் மற்றும் பெண்களுக்கு, கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் நடைபெற்ற இறுதி போட்டிகளை துவக்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகையும், கோப்பைகளும் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ வழங்கினார்.

## திருப்பத்தூர் வட்டம் ஜவ்வாது மலை பழங்குடியினருக்கும்

# எலவம்பட்டி பகுதி வாழ் மக்களுக்கும் பட்டா வழங்கிடுவீர்!

## பேரவையில் அ.நல்லதம்பி வலியுறுத்தல்!

**சென்னை, ஜன.24- திருப்பத்தூர் வட்டம் எலவம்பட்டி பகுதியில் வாழ்ந்து வருபவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கிட வேண்டும் என்று சட்டப்பேரவையில் திருப்பத் தூர் தொகுதி உறுப்பினர் அ.நல்லதம்பி கேள்வி நேரத்தின்போது வலியுறுத்தினார்.**

**அ.நல்லதம்பி** (திருப்பத்தூர்)

(அ) திருப்பத்தூர் வட்டம், எலவம்பட்டி மதுரா மைக்காமேடு மற்றும் ஜெகன் நாதன் வட்டம் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ)ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், எலம்பட்டி, மதுரா மைக்காமேடு கிராம புல எண் 438ல் 1.39.5 ஹெக்டேர் நிலம் இன்டஸ்ட்ரியல் டிபார்ட்மென்ட் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், UDRக்கு முந்தைய Survey Registerலும், 'அ' பதிவேட்டிலும் பரிசீலனை செய்ததில் மேற்படி புல எண் 438 ஆனது பாட்டை என பதிவாகியுள்ளது.



மேற்படி புலத்தினை ஒட்டி தமிழ்நாடு கனிம வள நிறுவனம் இயங்கி வந்து, தற்பொழுது செயல்பாட்டில் இல்லை என தெரியவருகிறது. எனவே, மேற்படி புலத்தில் குடியிருந்து வரும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தமிழ்நாடு கனிம நிறுவனம் TAMIN மேலாண்மை இயக்குநர்/முதன்மைச் செயலாளர் அவர்களின் கருத்துருவினை அனுப்புவதற்கு, கடிதம் 10 32025ன்மூலம் கோரப்பட்டுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்/முதன்மைச் செயலாளர் அவர்களின் கருத்துரு வரப்பெற்ற பின்னர் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**அ.நல்லதம்பி:** பேரவைத் தலைவர் அவர்களையும், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களையும், இளந்தலைவர் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, என்னுடைய திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, இளவம்பட்டி ஊராட்சியில், மைக்காமேடு என்கின்ற பகுதியில் சுமார் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 70 ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள்.

அந்தப் பகுதியில் பட்டா வழங்கக்கோரி, பல முறை அரசிடம் முயற்சி செய்தும், அந்த ஆவணப் பதிவேடில் நம்முடைய இன்டஸ்ட்ரியல் டிபார்ட்மென்ட் புறம்போக்கு என்று வந்ததன் காரணமாக Industries Departmentக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அவர்கள்நிபந்தனையுடன்கொடுத்த அனுமதியின் பேரில் 5 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள குடும்பங்களுக்கும் நிபந்தனையைத் தளர்த்தி Industrial மைக்கா கனிம வளங்களும் இல்லை. நம்முடைய கனிம வள நிறுவனங்களும் இயங்காத காரணத்தினால் அங்குள்ள மக்களுக்கு UDR periodல் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் கருதுகிறேன். எனவே, அப்பகுதி மக்களுக்கு பட்டா வழங்குவதற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?.

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல், 5 நபர்களுக்கு பாதுகாப்பு தூரத்திற்கு மேலாக, 50 மீட்டருக்கும் தூரமாக குடியிருந்தவர்களுக்கு 5 நபர்களுக்கு, ஆக்கிரமிப்பில் இருந்தவர்களுக்கு நாம் வீட்டுமனைப் பட்டா வழங்கியிருக்கிறோம். மீதமுள்ள 50 பேர் பாதுகாப்பு என்று சொல்லக்கூடிய, 50 மீட்டர் பகுதிக்குள் குடியிருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாடு கனிம வள துறையிடம் இது குறித்து கேட்டிருக்கிறோம். கனிம வளத் துறை தற்போது அப்பகுதியில் செயல்படாத காரணத்தினால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, பட்டா வழங்குவதற்குரிய பணிகளை அரசாங்கம் விரைவில் செய்யும்.

**அ. நல்லதம்பி:** கழக ஆட்சியில் நம்முடைய திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில், சுமார் 6 ஆயிரம், 7 ஆயிரம் இலவச பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக, முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இருப்பினும், திருப்பத்தூர், ஜவ்வாது மலை, பழங்குடியின மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதியில், பெருமாள்கோவிலூர், கம்பக்கோடிப்புதூர், நடுவூர் வருவாய்த் துறையில் அளவிடப்படாதunsurveyed areas அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்களுக்கு பட்டா கிடைக்காமல் இருக்கிறது. அப்பகுதியில் பட்டா வழங்கிடுமாறும், மேலும் கொடுவாம்பள்ளி, திருவனாம்பத்தூர், ஆவுனாயக்கன்பட்டி, நத்தம், கூட்ரோடு, கொரட்டி, தண்டுகானூர், ஆதி திராவிடர் காலனிப் பகுதி, திருப்பத்தூர் நகரத்தைச் சேர்ந்த இந்திரா நகர் பகுதியில், பல்வேறு மக்கள் பட்டாக்கள் கேட்டு விண்ணப்பம் அளித்துள்ளார்கள். அப்பகுதி மக்களுக்கும் பட்டா கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தமிழ்நாட்டில் இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு 22 இலட்சம் பேருக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பட்டா வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அப்பகுதி மக்களுக்கும் பட்டாக்களை வழங்குவதற்குரிய வழிவகைகளை நம்முடைய அரசாங்கம் ஆராயும். வழிவகை இருப்பவர்களுக்கும், வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தேவையான வேலைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்வதற்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதனடிப்படையில், உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.